# திருக்குறள் போற்றி

## தெளிவுரை

போற்றி:

**தமிழறிஞர் இளங்குமரனார்**

உரை:

**புலவர் குறளன்பன்**

**வள்ளுவர் அறிவியல் மையம்**

அரும்பாவூர் 621103

திருவள்ளுவர் மாவட்டம்

# திருக்குறள் போற்றி

தெளிவுரை

போற்றி:

## தமிழறிஞர் இளங்குமரனார்

உரை

## புலவர் குறளன்பன்


**வள்ளுவர் அறிவியல் மையம்**

அரும்பாவூர் 621103

திருவள்ளுவர் மாவட்டம்

• முதற்பதிப்பு : தி. பி. சிலை 2026 (1995 திசம்பர்)

* உரிமை : ஆசிரியர்க்கு

• நூல் வருவாயில் ஒருபகுதி
திருவள்ளுவர் தவச்சாலை
வளர்ச்சிக்கு பதிப்பு தோறும்
நல்கப்பெறும்.

• **விலை : உருபா : 10**

• நன்றி :
புலவர். தமிழமுதன் க. மு. கல். மு.
8/315 'அமுத இல்லம்'
கவியரசு கண்ணதாசன் நகர்
சென்னை 600118

அச்சிட்டோர் : கவிக்குயில் அச்சகம்
47, நல்லதம்பி தெரு,
சென்னை-5
தொ.பே. 836107

**மருத்துவர் க. கோபால் ம. இ. அ. இ**
வள்ளுவர் அறிவியல் மையம்
அரும்பாவூர் 621103
திருவள்ளுவர் மாவட்டம்

---

தமிழறிஞர் இளங்குமரனார் 'திருக்குறள் போற்றி'யைத் தந்தார்.

தோழர் குறளன்பன் உரை வரைந்துள்ளார்.

குறளாயம், திருவள்ளுவர் தவச்சாலை வழியில் திருக்குறள் போற்றிக்குத் தெளிவுரையை வள்ளுவர் அறிவியல் மையம் வெளியிடுவதில் பெருமகிழ்வு கொள்கிறது.

ஓதி உணர்ந்து உலகம் பயன்கொள்வதாக.

அரும்பாவூர்
25-12-95

**க. கோபால்**
பதிப்பாளர்

**புலவர் தமிழமுதன் சு. மு. கல். மு.**
தமிழ் வளர்ச்சிப் பேரவை
சென்னை

பக்தி வழிப்பட்டது போற்றி. பகுத்தறிவாளர் போற்றுவாரா?

ஐயத்தோடு நூலுக்குள் நுழைந்தேன். உரையாளர் குறளின் பொருளையும் மாற்ற வில்லை. அவரின் குறிக்கோளையும் மாற்றிக் கொள்ளவில்லை.

மண்ணும் மனிதனும் மணக்க வழங்கிய "திருக்குறள் போற்றி" மனம் கொண்ட வழிமுறை களைத் தெளிவுரை தொட்டுக் காட்டிச் சிறந்து விளங்குகிறது.

திருக்குறளையும் உரையையும் நுணுகிக் கற்கும் ஆற்றல் அற்றோரும் கற்பதற்குக் காலம் இல்லையெனக் கூறுவாரும் 'திருக்குறள் போற்றி'யை ஒரு முறை கற்றால் திருக்குறள் போற்றும் தகையர் ஆகலாம்.

குறளன்பன் உரை கடினஉரை எனினும் கரும்பாய்ச் சுவைத்திட சாறாய் இனித்திடும்.

சென்னை
29-12-95

அன்பன்
**தமிழமுதன்**

# திருக்குறள் போற்றி

## தெளிவுரை

1. அகர முதலாம் ஆதியே போற்றி

பொருள் : எழுத்தில் முன்னாகி நிற்கும் 'அ' என்னும் அகரமும், உலகின் இயக்கத்திற்கு முன்னாகி நிற்கும் 'ஆதி'யாம் இயற்கையும் முதன்மை ஆகும்.

விளக்கம்: அகரம் அனைத்து மொழிகளுக்கும் அடிப்படை. அகரம் போன்று ஆதியாகிய இயற்கை உலகிற்கு அடிப்படை.

மொழியாக்கத்திற்கு அகரமும், உலகின் ஆக்கத்திற்கு இயற்கையாகிய ஆதியும் உறுதுணை ஆகிறது.

மொழியின் இயக்கத்திற்கும், உலகின் இயக்கத்திற்கும் அவை இரண்டும் எடுத்துக்காட்டாவதனால் எடுத்துக் காட்டும் உவமை ஆகியது.

தெளிவு : அகரம் ஆதித் தலைமைக் கழகு

மூலம் : அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு—1

2. மலர்மிசை ஏகும் மாணடி போற்றி

பொருள் : மலரில் மேம்பட்டு விளங்கும் சிறந்தவர் வழி விளங்குவதாக.

விளக்கம் : உயர்ந்தார்க்கு வள்ளுவர் உரைத்த குறிப்பு: 'உலகத்தார் உள்ளத்துள் எலாம் உளன்'—294 மக்களின் மனதில் உயர்வுடைய சான்றோர் விரைந்து தங்கி ஒளிதருவதால் அவர்வழி மேம்பட்டது.

அவ்வொளியால், மலரனைய மக்கள் மனத்தால் விரிந்தும்; புகழாகிய மணவீச்சால் மேம்பட்டும் உயர்வார்.

உயிரிலும் உளத்திலும் ஒளியுடைய சான்றோரை மக்கள் தாங்கி உருப்பெறுவதனால் மலர் உருவகமாயிற்று'

'மாண்அடி' சிறப்பின் மேலது.

தெளிவு : மலர்வழி சான்றோர் மனவழியாகும்.

மூலம் : மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்
நிலமிசை நீடுவாழ் வார்—3

3. தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி

பொருள் : தன்னோடு ஒப்பிடத் தகுந்தவர் இல்லை என்னும் சிறந்ததோர் வழி சிறப்பதாக.

விளக்கம் : செயற்கரிய செய்யும் திறத்தார்—26
அறன் அறிந்த மூத்தார்—441
உற்றநோய் நீக்கி உறாமல் காப்பார்—442
பெரியாரைப் பேணும் பெரியார்—443-444
தக்கார் இனந்தெரிந்து ஒழுகும் தக்கார்—446
நற்கடன் அறிந்த நல்லார்—981
குணம் பெருகிய கொள்கையார்—982
ஊழி பெயரினும் பெயராத உள்ளத்தார்—989

தன்னோடு ஒப்பிடத் தக்கார் இல்லை என்று குறித்தது இச்சீர்மைச் சான்றோரை. 'தகை' என்றதும் இத்தகுதி யாளரையே.

தெளிவு : உவமிக்க ஒண்ணார் ஒப்பிலா ராவார்.

மூலம் : தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது—7.

4. எண்குணத் திலங்கும் இறையே போற்றி

பொருள் : எளிய இயல்பும், இயக்கும் ஆளுமையும் ஏற்றுச் சிறந்தார் வழி சிறப்பதாக.

விளக்கம் : 'எண்' எளிய; செவ்விய என்னும் பொருளை ஈவது. எளிமை இடன் அறிந்த இயக்கத்தது. இது குற்றமில்லாதது.

'இறை' தலைமை பற்றி எழுந்தது. இஃது ஆளுமை இயல்பினது.

தெளிவு : எளிமை ஆளுமை ஏற்ற ஏணி.

மூலம் : கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை—9.

5. அமிழ்த மழையாம் அருளே போற்றி

பொருள் : அமிழ்தம் ஆகிற மழையை ஒத்த அருளியல் வாழ்வதாக.

விளக்கம் : அமிழ்தம் : சுவை கொண்டும், சோர்விலாப் பயன்கொண்டும் சொல்லப்பட்ட சொல்.

அருள் : அன்புடைய நெஞ்சம் உருகுங்கால் ஆகும் ஆக்கம்.

வான்மழை சுவையுடையது மட்டுமன்று. வையத்து உயிர் துளிர்க்கும் உணவையும் ஆக்கவல்லது. அது சுவையும் பயனும் தாங்கி உலகு ஆள்வதனால் 'அமிழ்தம்' ஆயிற்று.

தெளிவு : வழங்கும் வானாய் வளர்ந்து வாழ்க!

மூலம் : வான்நின்று உலகம் வழங்கி வருதலான்
தான்அமிழ்தம் என்றுணரற் பாற்று—11.

6. ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி

பொருள் : உணர்ச்சியைத் தூண்டி ஊக்குகின்ற பொறிகள் ஐந்தையும் ஒழுங்குபடுத்தும் ஆற்றல் ஓங்குவதாக.

விளக்கம் : உணர்ச்சி தோன்றி அழியும் தன்மை உடையது, உணர்வு ஒழுங்குபடுத்தி உயர்த்துவது.

உணர்ச்சிவழிப் போகாமல் உணர்வு வழிப்படுவது உயர்ந்தார் ஒழுக்கம்.

உணர்வுவழிப்படும் பொழுது அவர் வல்லமைக்கு உரியவர் ஆகிறார்.

தெளிவு : பொறிவழி ஒழுங்கால் புகழ்வலிவேறும்;

7. நிறைமொழி அருளும் நிறைவே போற்றி

பொருள் : உறுதியாய் நிறைவேறும் நல்லுரை அருளும் நிறைவு நெறி விளங்குவதாக.

விளக்கம் : சென்றவிடத்து மனத்தைச் செலுத்தாமலும் சிந்திப்பதில் ஒருநிலைப்பட்டு நிற்பதனாலும் உறுதி யாளர் சொற்கள் உண்மையாகிச் சிறக்கின்றன.

உறுதியாய் நிறைவேறும் மொழி 'நிறை மொழி' என்று ஓதப்பெற்றது. நிறை முழுமையை நோக்கி நகர்த்தி நிற்கும்.

தெளிவு : உறுதியார் நிறைமொழி உலகில் ஓங்கும்.

மூலம் : நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்—28.

8. குணமெனும் குன்றே குறியே போற்றி

பொருள் : குணத்தில் மலைபோல் உயர்ந்து நிற்கும் குறிக்கோள் உடைமை வாழ்வதாக.

விளக்கம் : கைக் கொள்ளும் நெறிவழி, குணம் கால் கொள்ளும். குணமெனும் பண்பின் முதன்மைக்கூறு சலியாமையும் சாயாமையும் என்று கூறும்.

சலியாமையும் சாயாமையும் கொண்டு குணநெறியார் நிற்பதனால் மலையைக் குணத்திற்குச் சான்று காட்டிச் சென்றனர்.

தெளிவு : குன்றா முயற்சி உரனைக் கொடுக்கும்

மூலம் : குணமெனும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது—29.

9. மனத்தில் மாசிலா மணியே போற்றி

பொருள் : மனத்தில் குற்றமின்றிச் சிறந்து விளங்கும் சீர்மை விளங்குவதாக.

விளக்கம் : நன்றெனப்படுவது நன்னினைவு. நன்னினைவாளர் குற்றப்படும் நினைவை மறந்தும் விரும்பார்.

அவர் விருப்பிலும் அளவு மீறார். வெகுண்டு வீணாகார் இன்னாத சொல்லி இடர்ப்படார்.

'அறம் தீங்கை அறுத்தல்' என்னும் அறவழியில் அமைவார். அறவழி அறிந்தார் குற்றம் அற்றாராய்த் தம்மை ஆள்வார்.

தெளிவு : மனத்தால் சிறந்தால் குற்றம் மடியும்

மூலம் : மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்திறன்
ஆகுல நீர பிற—34.

10. வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி

பொருள் : வாழும் வகையறிந்து வாழும் வாழ்வியல் நெறி வாழ்வதாக.

விளக்கம் : வாழும் வகைமை எனப்படுவது முறைமை. முறைமை மீறாது வாழ்வார் நீண்டு வாழ்வார். நன்றாற்றல் நீட்சிக்குரியது; நெடிது நினையப்படுவது. நினையப்படுவதனால் புகழ் நிலைக்கும்.

தெளிவு : முறைமை வாழ்வால் முழுமை வாய்க்கும்.

மூலம் : வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்—50.

11. மங்கல மனையற மாட்சியே போற்றி

பொருள் : பொலிவுதரும் இல்லற வாழ்வியல் சிறந்து விளங்குவதாக.

விளக்கம் : வேர்—மனைவி, மரம்—கணவன், வேரும் மரமும் ஒன்றி இயற்றுவது மனையறம்.

எள்ளப்படாத இயல்பினதைப் பொலிவு என்பர். வினை மேம்பாட்டால் மாட்சி மேம்படும்.

தெளிவு : ஒன்றிய மனத்தால் மனையறம் ஓங்கும்.

மூலம் : மங்கலம் என்ப மனைமாட்சி மற்றதன்
நன்கலம் நன்மக்கட் பேறு—60

12. அறிவறி பண்புப் பேறே போற்றி

பொருள் : அறிவு அறிந்து சொல்கிற பண்பு நலம் விளங்குவதாக.

விளக்கம் : அறிவின் பயன் பண்பை அடைதல். அழகிய பண்பை அடையப் பெற்றாரின் ஆக்கம் அவர் போலும் பண்புடையாரை ஆக்குதல். அத்தகைய உயிராக்கங்கள் அறிவறிந்த பயனை அறிவிப்பனவாகும். அவ்வாறு இல்லையேல் அது மக்கட் பிறப்பு ஆகாது.

தெளிவு : அறிவின் ஆக்கம் பயன்மை ஆகும்.

மூலம் : பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பேறு அல்ல பிற—61

13. அன்போடு இயைந்த வழக்கே போற்றி.

பொருள் : அன்பு உடைமையோடு சேர்ந்த செயல் நலம் வாழ்வதாக.

விளக்கம் : உயிருக்கும் உடம்புக்கும் பொருந்திய உறவு அன்பின் உயர்ச்சி நிலை.

அன்பின் உடைமை உயிர். அறிவின் உடைமை, செயல். அவற்றின் இணைவால் ஆனது உலக இயக்கம்.

தெளிவு : அன்பின் நெருக்கம் இயக்கம் ஆகும்.

மூலம் : அன்போடு இயைந்த வழக்குஎன்ப ஆருயிர்க்கு
என்போடு இயைந்த தொடர்பு—73

14. வருவிருந்து ஓம்பும் வளமே போற்றி.

பொருள் : வருகின்ற விருந்தினரைப் போற்றிக் காப்பவனின் வளநெஞ்சம் வாழ்க.

விளக்கம் : நினையுந் தொறும் வருவார் விருந்து நிலையினரார். முன்னர் வராமல் புதிதாய் வருவாரே விருந்து நிலையினர்.

அவ்வகை விருந்தைப் போற்றி அமைவாரின் செல்வம் அழியாது. உதவுவார் உயர்த்தப் பெறுவது போல போற்றுவார் செல்வமும் பெருகி ஒளிரும்.

தெளிவு : வளரும் அன்பினால் வருவிருந் தோங்கும்.

மூலம் : வருவிருந்து வைகலும் ஓம்புவான் வாழ்க்கை
பருவந்து பாழ்படுதல் இன்று—83.

15. இன்சொல் வழங்கும் இயல்பே போற்றி.

பொருள் : இனிய சொல்லைத் தரும் இயல்புடைமை இலங்குவதாக.

விளக்கம் : இயல்பில் இனியராய் இல்லார் என்பார் இல்லை இனியர் அல்லாரும் எதிர்பார்ப்பது இனிய சொல்லை.

உலகத்தார்க்கு ஒருபோதும் தீங்குதராத சொல்லை இன் சொல்' என்று உரைப்பர். உலகம் உவத்தலும் அதுவே.

இனிய கனியனையது இன்சொல். காயனையது வன் சொல். இனிய கனிச் சொல் பேசாமல் காய்ச்சொல் பேசுதலால் என்ன பயன்? ஏதும் இல்லை.

தெளிவு : இனியன பேசி இன்பம் எய்துக.

மூலம் : இன்சொல் இனிதீன்றல் காண்பான்
எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது—99

16. செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி

பொருள் : முன்னர் உதவி செய்யாத பொழுதும் முன் வந்து உதவி செய்கின்ற செழித்த பண்பு வாழ்வதாக

விளக்கம் : செய்ததற்குச் செய்தல் செய்ந்நன்றி. செய்யாதார்க்குச் செய்தல் சீருதவி.

இயற்கைச் செழுமை உதவியின் இயல்பு. இயற்கை அனையராய் உதவி இன்புறுக.

தெளிவு : செய்யார்க் குதவும் சீர்மை தாங்குக.

மூலம் : செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது—101

17. காலத் துதவும் கனிவே போற்றி

பொருள் : உதவி தேவைப்படும் பொழுதில் உதவுகின்ற கனிவுடைமை உயர்வதாக.

விளக்கம் : உதவி, உதவ வேண்டும் பொழுதில் உதவுவது. உதவும் காலத்தைப் பொறுத்தும், உதவி செய்வாரின் சால்பைப் பொறுத்தும் உதவியின் தன்மை உயரும்,

செய்வது சிறியது ஆயினும் செய்யும் காலத்தால் பெரியதாகிச் சிறக்கும்.

தெளிவு : தேவைக் குதவல் செழுமை சேர்க்கும்.

மூலம் : காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது—102

18. நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி.

பொருள் : மனம் சாயாத ஒழுங்குநிலை உயர்வதாக.

விளக்கம் : மனம் சாயாமை நடுவுநிலையால் வெளிப் படும். நடுவு நிலையர் உறவு பகை, நட்பு போன்ற வற்றுக்கு இடங்கொடாத நல்லறிவாளர்.

அவர் தன்னைச் சமன்படுத்தி ஆளும் சான்றாண் மையர். அச்சான்றாண்மையால் சீர்தூக்குங்கோல் அவர்க்கு உவமையாயிற்று.

தெளிவு : வைர நெஞ்சால் நடுநிலை வாழும்.

மூலம் : சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்
அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க் கணி—118

19. நிலையில் திரியா நிலையே போற்றி.

பொருள்: தன் ஒழுக்க நிலையில் சிறிதும் மாறுபடாத மலைபோலும் திண்மை உயர்வதாக.

விளக்கம்: இயற்கைச் சீற்றத்தாலும் மாறுபடாமை மலையின் இயல்பு.

இடருற்ற போதும் அசையாது இருப்பது நிலை நெறியார் இயல்பு.

தெளிவு: திரியாத் தன்மை சிறப்பின் சீர்த்தி

மூலம்: நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது—124

20. ஒழுக்கம் குறையா உரமே போற்றி.

பொருள்: நல்ல நடத்தையில் குறைவுபடாத மனவலிவுடைமை வாழ்வதாக.

விளக்கம்: நன்னடத்தை சொல்லாலும் செயலாலும் தீங்கு பயவாத நெறியது.

தீங்கு பயவாத நெறியார்க்குத் தேவை மனவலிவுச் சீர்மை.

தெளிவு: வழுவா மனத்தால் ஒழுக்கம் வளரும்.

மூலம்: ஒழுக்கம் உடையவர்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்—139

21. பொறுக்கும் அழியாப் புகழே போற்றி.

பொருள்: பொறுத்துக் கொள்ளும் பண்பினால் அழியாப் புகழ் பெறும் ஆக்கம் சிறப்பதாக.

விளக்கம்: தண்டித்தல், செருக்குக்கொண்டார் செயற்பாடு. பொறுத்தல் புகழ்பெறுவார் பண்பாடு.

தண்டித்தவர்க்குத் தண்டித்த அப்பொழுதில் இன்பம் உண்டாகித் தழைக்கும்;

பொறுப்பார்க்குப் பொறுக்கும் பெருந்தன்மையால் வரும் புகழ் வாழ்நாள் முழுமையும் பேசப்படும்.

தெளிவு : பண்படப் பழகின் பொறுமை பூக்கும்.

மூலம் : ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம்
பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ்—156.

22. அழுக்கா றில்லா அறனே போற்றி.

பொருள் : பொறாமைப் படாத அறமனம் வாழ்வதாக.

விளக்கம் : தன்னைப்போல் பிறரை நினையாமை அழுக்கேறிய தன்மையால் தோன்றும்.

மனம் அழுக்கேற விடுவது 'பொறாமை' ஆகிய வாயிலுக்குத் தாழ்திறந்து விடுவது போன்றது.

அழுக்கறுத்தால் பொறாமை அகலும். அடுத்தவர் ஆக்கம் கண்டு புழுங்க வேண்டியதில்லை.

தெளிவு : அறத்தார் பொறாமை அற்றார் ஆவார்.

மூலம் : அறன் ஆக்கம் வேண்டாதான் என்பான் பிறன்
ஆக்கம்
பேணாது அழுக்கறுப் பான்—163

23. அறனறிந்து வெஃகா அறிவே போற்றி.

பொருள் : அறத்தைத் தெரிந்து அவ்வழியில் நின்று அடுத்தவர் பொருளை விரும்பாத அறிவுடைமை சிறப்பதாக.

விளக்கம் : அறிவுநெறிப்பட்டார் தந்தது அறம் அதனை அறிந்து அவ்வழியில் செல்வார் அறன்அறிந்தார்.

அடுத்தவர் பொருளை விரும்பாத அருமையர் அவர், அவ் அருமைத் திறம் அவர் அறிவுநெறி.

ஆக்கும் ஆற்றல் உடைமையால் அடுத்தவர் பொருளை அவர் விரும்பார் ஆயினார்.

தெளிவு : அறிவர் விரும்பார் அயலார் ஆக்கம்.

மூலம் : அறனறிந்து வெஃகா அறிவுடையார்ச்சேரும்
திறனறிந்து ஆங்கே திரு—179

24. புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி.

பொருள் : பிறனைப் பிறரிடம் பழித்துப் பேசுதல் அறியாத பொலிவுடைமை ஓங்குவதாக.

விளக்கம் : பழித்தும் புனைந்தும் பேசுதல் புறஞ்சொல்லல் அயலில் ஒன்றும், நேரில் ஒன்றும் பேசுவது அறநெறி உடையதன்று.

நெறியல்லர் வழியில் நின்று புறம்பேசி வாழ்வதினும் இறந்துபடுவது சிறந்தது. அது போலும் அறப்பொலிவு வேறு இல்லை.

தெளிவு : புறம்பழி பேசார் அறப்பொலி வுடைவார்

மூலம் : புறங்கூறி பொய்த்துயிர் வாழ்தலின் சாதல்
அறங்கூறும் ஆக்கம் தரும்—183

25. பயனில பகராப் பண்பே போற்றி

பொருள் : பயன் அற்றனவற்றைப் பேசாத பண்புநலம் சிறப்பதாக.

விளக்கம் : வெற்றெனத் தொடுத்தல் விருப்பை வெளிக் காட்டும். அப்பயன் அற்ற வெளியீட்டால் அவர் மதிப்பு அழியும்.

'பதடி' ஆகிப்பயன்படார். சான்றோர் பயனற்றன வற்றைபேசார்.

தெளிவு : பயன்தரப் பேசிப் பழகப் பயில்க.

மூலம் : நயன்இல சொல்லினும் சொல்லுக சான்றோர்
பயன்இல சொல்லாமை நன்று—197

26. பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி.

பொருள் : பிறருக்குத் தீங்கு நினையாத பெருமையுடையவரைப் போற்றுக.

விளக்கம் : நன்வினைவர் கேடு நினையார். அவர் அவ்வாறு நினைவதால் வரும் கேடு அறிவார்.

கேட்டிற்குக் காரணமாவது கெடுநினைவு. கெடு நினைவைக் கைவிடுவது பெருமை கொடுக்கும்.

தெளிவு : நினைவு நலத்தால் தீங்கு நீங்கும்.

மூலம் : மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு—204

27. ஒத்தது அறியும் உயர்வே போற்றி.

பொருள் : உலகநடையை அறிந்து ஒழுகும் உயர்ந்த வரைப் போற்றிஒழுகுக.

விளக்கம் : உயர்ந்தார் அறிவும் செயலும் உடையார். அறிவும் செயலும் ஒத்துப்போகும் நடை உலகநடை.

உயிர்வாழ்வான் ஒத்தது அறிந்து ஒழுகும் நடைக்கு உரியான். உயர்ந்தார் நடையில் ஒழுகானை உயிருள்ள வன் என்று உரையார்.

தெளிவு : ஒத்தது அறிதல் உயிர்வாழ் வாகும்.

மூலம் : ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப்படும்—214

28. ஊருணி நீராம் உடைமையே போற்றி

பொருள் : ஊர் உண்ண உதவும் ஊருணி நீர்போலும் செல்வத்தை யார்க்கும் பயன்படுமாறு செய்யும் வண்மை வாழ்வதாக.

விளக்கம் : கொண்டது கொடுப்பது ஊருணிக்கொடை. கொடுபடக் கொடுத்தது செல்வக் கொள்கை.

நிறைவு நல்கும் நீர்மையது. அறிவு நிறைந்த பேரறிவர் செல்வமும் அதுபோல் பயன்பாட்டிற்கு ஆவதாம்.

தெளிவு : அறிவர் உடைமை பொதுமை ஆகும்.

மூலம் : ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு—215

29. பயன் மரம் ஆகும் பரிவே போற்றி.

பொருள் : எளிதில் யாவர்க்கும் பயன்படும் பழுத்த பயன் மரம் போல உதவும் தன்மை உயர்வதாக.

விளக்கம் : மரத்தின் இலை, பூ, காய், கனி, சருகு' பட்டை யாவும் பயன்படுமாறு விளங்கும்மரம் பயன் மரம்.

ஒப்புரவாளன் செல்வமும் அதுபோன்று உதவும் தன்மை உடைமையால் பயன்மரத்தோடு ஒப்பிடப்பட்டது.

தெளிவு : ஒப்பும் உளத்தால் ஒப்புர வோங்கும்.

மூலம் : பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயன்உடை யான்கண் படின்—216

30. மருந்து நலமாம் மாண்பே போற்றி.

பொருள் : மருந்தைப் போல நலந்தரும் சிறப்பு விளங்குவதாக.

விளக்கம் : வலிநீக்கி, வலியான் வரும் துன்பம் நீக்கி வலிமையுண்டாக்கி நிற்பது மருந்து.

தக்கமருந்து மருந்துமரம் போன்றது. ஒப்புரவாளன் செல்வமும் தன்குறை நோக்காது உதவித் தாங்கும்.

தெளிவு : உலகின் துன்பை உதவி ஒழிக்கும்.

மூலம் : மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்—217

31. வறியார்க் குதவும் வாழ்வே போற்றி.

பொருள் : தேவைப்படுவார்க்குத் தேவையை வழங்கும் வாழ்வு சிறப்பதாக.

விளக்கம் : வாய்ப்பும் வழியும் அற்றவர் வறியார். வறியார்க்கு வழங்குவார், குறியெதிர்ப்புக் கொள்ளாத மாட்சியர்.

தெளிவு : இயற்கை ஈகை எதிர்பார்ப்பின்மை.

மூலம் : வறியார்க்கொன் றீவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து—221.

32. பசித்துயர் மாற்றும் பரமே போற்றி.

பொருள் : பசியினால் வருகின்ற துன்பத்தை மாற்றும் வலிமை வாழ்வதாக.

விளக்கம் : பொறுக்க முடியாத தன்பசியைப் பொறுத்துக் கொள்ளும் வலிமையைவிட பசித்தவர் பசியைப் போக்குவார் வலிமை புகழ்தாங்கிப் பொலியும்.

தெளிவு : பிறர்துயர் தீர்ப்பார் வலிமை பெரிது.

மூலம் : ஆற்றுவார் ஆற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்—225

33. வசையிலாப் புகழே வானே போற்றி.

பொருள் : பழிதொடாத சிறப்பும் வான்போலும் உயர்வும் திகழ்வதாக.

விளக்கம் : பெருஞ்சிறப்புக்கு உரியவனும் சிறுபழியால் பாழ்படுவான்.

எட்டாத வான்போன்று பழி எட்டாதவனே இசையாளன்.

எள்ளப்படுவான் வாழ்வான் என்னப்படான்.

தெளிவு : பழியா வானாய் பெருமை பெறுக.

மூலம் : வசையொழிய வாழ்வாரே வாழ்வார்
இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்—240

34. தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி.

பொருள் : தன்னுடைய உயிருக்கு அஞ்சாத தகுதி தழைப்பதாக.

விளக்கம் : தன்னுயிர்க்கு அஞ்சாத தகுதியர் பிற உயிரைத் தாங்கி அருள் செய்வார். அருளுடையார் பிற உயிர்க்கு அஞ்சத் தேவையில்லை. தீங்கு செய்யா தார்க்கு யாரே தீங்கு செய்வார்?

தெளிவு : அல்லன செய்யார் அஞ்சுதல் அற்றார்

மூலம் : மன்னுயிர் ஓம்பி அருளாள்வார்க் கில்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை—244.

35. அல்லல் அறியா அருளே போற்றி.

பொருள் : துன்பத்தை அறியாத அருள் செழிப்பதாக.

விளக்கம் : பரிவு காட்டுவார் அருள்நெஞ்சப் பெற்றியார். அருள் நெஞ்சர் யாவர் துயரையும் அகற்றுவார். அனைவர் துயரையும் அகற்றுவாரை அல்லல் தீண்ட ஒருப்படுவார் ஆர்?

ஆதலின், அருள் நெஞ்சினரை அல்லல் தீண்டும் வழி இன்மையது ஆயிற்று. அப்பெற்றியான் அவர் அல்லல் அறியாதார் ஆயினார்.

தெளிவு : அருளால் அல்லல் அடியோ டகலும்.

மூலம் : அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கும்
மல்லல்மா ஞாலம் கரி—245.

36. உயிரழித் துண்ணா ஒளியே போற்றி

பொருள் : உயிரை அழித்து உண்ணுதலைச் செய்யாத ஒளிநெறி ஓங்குவதாக.

விளக்கம் : ஒருயிரை அழித்து இன்னோர் உயிர் உவப்பது உவகையாகாது. அஃது உயிர்க்கொலை.

வாழ்வு உயிரினால் விளங்குவது என்று அறிந்தபின்னும் உயிர்க் கொலையை விரும்பலாமா?

தெளிவு : உள்ளம் கொல்வது உயிர்க்கொலை ஆகும்.

மூலம் : அவிசொரிந்து ஆயிரம் வேட்டலின் ஒன்றன்
உயிர்செகுத்து உண்ணாமை நன்று—259.

37. தன்னுயிா தானறு தவமே போற்றி.

பொருள் : தனது என்னும் உயிர்ப்பற்றும், தன்செருக்கும் நீங்கிய அருள் நெஞ்சம் சிறப்பதாக.

விளக்கம் : தந்நலம், தற்செருக்கு என்னும் இரண்டும் உயிர் தாங்கும் பற்றுக்கள். பற்றற்றார் இவற்றை அறுத்த பெற்றியார். பற்று நீங்கப் பெற்றாரை யாவரும் பாராட்டுவர்.

தெளிவு : பற்றை அறுத்தால் பாராட்டுப் பெறலாம்.

மூலம் : தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாம் தொழும்—268.

38. கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி.

பொருள் : இறப்பையும் வென்று வாழும் இயல்பு இலங்குவதாக.

விளக்கம் : உடல் வலிவும், உள்ள வலிவும் உயிர் நீட்சிக்கு ஊன்றுகோல். அந்நீட்சி அவர் இறப்பை வென்று வாழ அரணாயிற்று.

தெளிவு : முறைமையும் உரனும் நீட்சியின் முதற்படி.

மூலம் : கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு—269.

39. அளவறி நெஞ்சத் தறமே போற்றி.

பொருள் : அளவு அறிந்து ஒழுகும் அறநெஞ்சம் அமைவதாக.

விளக்கம் : அறம் அளவின் எல்லை. அளவு தாண்டுவது அறம் அன்று.

அறத்தின் எல்லை அறிந்து நடவார் கள்வர் ஆவார் கள்வர் நெஞ்சு கரவு நெஞ்சு. கரவு நெஞ்சர்க்கு ஏதுகோடு?

தெளிவு : எல்லையில் நிற்றல் இன்பம் ஈனும்

மூலம் : அளவறிந்தார் நெஞ்சத்து அறம்போல் நிற்கும்
களவறிந்தார் நெஞ்சில் கரவு—288.

40. உள்ளத்தாற் பொய்யா ஒழுக்கமே போற்றி

பொருள் : மனம் அறிய மாறுபடாத ஒழுங்குநெறி வாழ்வதாக.

விளக்கம் : மனமாகிய மூளையாவற்றையும் பதிந்து வைத்திருப்பது. பொய்பட ஒழுகும் பொழுதெலாம் உறுத்திப் புலப்படுத்தும்.

தெளிவு : பொய்யா ஒழுக்கம் புகழைப் பயக்கும்.

மூலம் : உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லான் உளன்—294.

41. வெகுளியை மறக்கும் விரிவே போற்றி

பொருள் : சினத்தை மறக்கும் விரிவான மனம் வாழ்வதாக.

விளக்கம் : சினம்தானே தோன்றுவதன்று. தீய நினைவுகள் சினத்தைத் தூண்டுகின்றன.

நினைவால் நிகழ்வும், நிகழ்வால் நடப்பும் பிறப்பது நெடுவழக்கு.

சினத்திற்குக் காரணமாகும் தீய நினைவுகளை அறுத்தால் சினம்தேயும்.

தெளிவு : விரிக்கும் மனத்தால் சினத்தீ விலகும்.

மூலம் : மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனால் வரும்—303

42. இன்னாமை எண்ணா இனிமையே போற்றி

பொருள் : துன்பம் செய்ய நினையாத இனிய எண்ணம் சிறப்பதாக.

விளக்கம் : இன்னா செய்யும் நினைவு எதிர்பார்ப்பு போட்டி, பகை, பொறாமை, சினம் அனைய காரணங் களால் எழுவது.

இன்னா செய்தார்க்கும் இனியன செயின் எத்தனை நாணுவர்? ஏற்படுமா தீய நினைவு?

தெளிவு : இனிமை தீமை எண்ணாமை யாகும்.

மூலம் : இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்—314.

43. பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி

பொருள் : பகிர்ந்து உண்டு யாவரையும் பசியிலிருந்து பாதுகாக்கும் பண்பு பொலிவதாக.

விளக்கம் : கொடுத்தால் குறையும். குறைந்தால் கிட் டாது. இக்கொடு நினைவு கொடுப்பதைத் தடுக்கிறது.

கொடுப்பவர்க்கு இன்னொருவர் கொடுப்பார். இவ் வுணர்வு வந்தால் கொடுக்கும் எண்ணம் இறந்துபடாது.

கொஞ்சம் நினையுங்கள். கொடுக்கிற வானம் குறைந்தா போய்விட்டது? உயர்ந்தன்றோ ஒளிர்கிறது!

தெளிவு : பகிர்ந்து பழகும் பண்பர் ஆகுக.

மூலம் : பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை—322

44. நிலைபே றுணரும் நிலையே போற்றி

பொருள் : நிலையாமையை உணருகின்ற அறிவுநிலை நீள்வதாக.

விளக்கம் : இளமை, செல்வம், இன்பம், துன்பம், யாக்கை உயிர்வாழ்க்கை என்பவை யாவும் நிலையுடையன வல்ல.

தனக்கென முயலாது பிறர்க்கென முயன்று வாழ்வது நிலைபேற்றைத் தரும்.

தெளிவு : நன்று என்றும் நிலைபேறுடையது.

மூலம் : நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவு ஆண்மை கடை—331

45. பற்றது பற்றா பற்றே போற்றி.

பொருள் : விரும்பி ஒன்றைப் பற்றாத விருப்பற்ற நிலை வளர்வதாக.

விளக்கம் : பற்று, அகப்பற்று, புறப்பற்று என்று இருபாற் படும். மனம் விரும்புவது அகப்பற்று. புறப்பற்று செல்வச் சேர்ப்பு போன்றவை.

இவ்விரு பற்றை அற்றார் பற்றற்றார் எனப்படுவார் இவற்றில் எவற்றையும் பற்றாதார் துன்பத்தைப் பற்றி இடர்ப்பட வேண்டியதில்லை.

தெளிவு : பற்றை அறுத்தால் துன்பம் பறக்கும்.

மூலம் : தலைப்பட்டார் தீரத் துறந்தார் மயங்கி
வலைப்பட்டார் மற்றை யவர்—348

46. மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி

பொருள் : உள்ளதனை உள்ளபடி உணரும் உண்மை உயர்வதாக.

விளக்கம் : அறியாமை மூடுபனி அனையது. மூடுபனியை விலக்கினால் முழுமை வெளிப்படும்.

முழுமையை உணர்த்து கொள்வது மெய்ப்பொருள் அவ்வறிவால் அறியாமை இருள் அகலும்.

தெளிவு : மெய்ப்பொருள் கண்டார் மேன்மை அடைவார்

மூலம் : இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு—352

47. ஐயம் அணுகாதித் தெளிவே போற்றி

பொருள் : அறிவுத் தடுமாற்றம் அடையாத தெளிவு அமைவதாக.

விளக்கம் : அரைகுறைப் போக்கு ஐயத்திற்கு இடனாகும், அறிவுத் தடுமாற்றத்திற் கு ஆட்படுத்தும்.

அறிவுத் தடுமாற்றம் உடையார் மெய்யறிவர் ஆகார். அறிவால் உணர்ந்து தெளிவது மெய்ப்பொருள் ஆறு.

உணர்ந்து தெளியார் ஐம்புலனை ஒடுக்கி ஒளிர்வார் ஆயினும் அவர்க்கு நிலைத்த பயன் ஒட்டா.

தெளிவு : உணர்ந்து தெளியும் ஒளியார் ஆகுக.

மூலம் : ஐயுணர்வு எய்தியக் கண்ணும பயம்இன்றே
மெய்யுணர்வு இல்லா தவர்க்கு—354

48. சிறப்பென்னும் செம்பொருட் செறிவே போற்றி.

பொருள் : செம்மையான மெய்ப்பொருள் அறிவு தழைப் பதாகுக.

விளக்கம் : அறிவு சேரச்சேர அறியாமை அகலும், ஆராய ஆராய மெய்ப்பொருள் அகப்படும்.

தெளிவு : அறிவுத் திறத்தார் தெளிவை அடைவார்.

மூலம் : பிறப்பென்னும் பேதைமை நீங்கச்
சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு—358

49. பேரா இயற்கைப் பெற்றியே போற்றி.

பொருள் : எப்பொழுதும் மாறாத இயற்கை இலங்குவ தாக.

விளக்கம் : மனநிறைவு கண்டு நில்லாரை விருப்பு வெய்யில் வருத்தும்.

விருப்பை அறுத்தால் நிறைவு கண்டு மாறாதிருக்கலாம். பிறழாமை பேராக இயற்கைப் பெற்றித்து.

தெளிவு : குலையா நெஞ்சுரம் விருப்பைக் கொல்லும்
மூலம் : ஆரா இயற்கை அவாநீப்பின் அந்நிலையே
பேரா இயற்கை தரும்—370

50, அசையா உறுதி ஆக்கமே போற்றி.

பொருள் : அசைந்து கொடுக்காத உறுதியான ஆக்கம் அமைவதாக.

விளக்கம் : உறுதியாய் நின்று ஒன்றை ஆக்குவது ஆக்கம். அசைவு காலம், இடம், பொருள், சுற்றுச் சார்பால் ஆவது. அந்நிலைப்பாட்டில் அசையாதவரின் உடையார் ஊழையும் வெல்லும் உறுதியாளர்.

தெளிவு : உறுதியார் ஊக்கம் ஊழையும் வெல்லும்.
மூலம் : ஆகுஊழால் தோன்றும் அசைவின்மை
கைப்பொருள்
போகுஊழால் தோன்றும் மடி—371

51 முறைசெய் தருளும் இறையே போற்றி.

பொருள் : அறத்தின் வழியில் ஆளும் தலைமைப் பண்பு அமைவதாக.

விளக்கம் : முறை அறநூல் முறைமை. அறம் எவ்வுயிரையும் காக்க அறிவுறுத்துவது.
முறைபிறழானை மக்கள் மகிழ்ந்து வாழ்த்துவர்.

தெளிவு : இறைமைக் கிலக்கணம் முறைபிறழாமை
மூலம் : முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறைஎன்று வைக்கப்படும்—388.

52. உலகோ டுவப்புறும் உறவே போற்றி

பொருள் : உலகு இன்பமுற உழைக்கும் ஒழுக்கம் உயர்வதாக.

விளக்கம் : தன்னை நினையாமல் தன்னைத் தாங்கும் உலகத்தை நினைவது சான்றோர் சால்பு.

தான்வேறு பிறர்வேறு என்று எண்ணா பொது நோக்குச் சிந்தையர். உலகு இன்பமுற உன்னுவதும் அவ் உயர்நோக்கு கொண்டு என்று உணர்க.

தெளிவு : பயனாகிப் பயனாக்கல் சான்றோர் பொன்நெறி

மூலம் : தாமின் புறுவது உலகின் புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந் தார்—399.

53. நுண்மாண் நுழைபுல நோன்பே போற்றி

பொருள் : நூல் சொல்லும் நுட்பமான பொருளை ஆராயும் அறிவு வளர்வதாக.

விளக்கம் : அறிவு நினைவின் வெளியீடு. அறிவின் திறப் பாடு நுண்ணறிவு. ஆராய்ந்து சீர் தூக்கல் நூலறிவு.

நூலறிவும் நுண்ணறிவும் இணையாரை உலகு நினை யாது. உலகு நெடிது நினைவது இரண்டும் உடையாரை என்றறிக.

தெளிவு : நோக்கில் சிறந்தால் நுட்பம் நோக்கலாம்.

மூலம் : நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை யற்று—407

54. ஆவதறியும் அறிவே போற்றி

பொருள் : இதனால் இன்னது ஆகும் என்று அறியும் அறிவு இயைவதாக.

விளக்கம் : ஆவதறிவார் படுமுன்னர் அறிவார். அறிந்த தறிவார் பட்டபின் அறிவர்.

முன்னர் அறிதல் எண்ணத் திறப்பாடு. வந்தபின் அறிதல் அறியாமையின் வெளிப்பாடு.

தெளிவு : ஆவது அறிதல் நினைவால் ஆகும்.

மூலம் : அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதுஅறி கல்லா தவர்—427

55. எதிரதாக் காக்கும் இயல்பே போற்றி

பொருள் : வருமுன்பு அறிந்துகொண்டு வரப்போவத னைத் தடுத்துக் கொள்ளும் இயல்பு வளர்வதாக.

விளக்கம் : வருமுன் குறிகாட்டல் நோயின் வழக்கம். வரவிருப்பதனை அறிந்து செய்வது முன்நடவடிக்கை. தொடக்கத்தில் எதிர்கொள்வது துன்பத்தைத் தடுப்ப தனையது. எதிரதாகும் இவ்இயல்பால் இயக்கம் இனி தாகும்.

தெளிவு : முந்தித் தடுத்தல் முழுக் காப்பாகும்.

மூலம் : எதிரதாக் காக்கும் அறிவினார்க் கில்லை
அதிர வருவதோர் நோய்—429

56. வருமுன் காக்கும் வாழ்வே போற்றி

பொருள் : குற்றம் வருவதற்கு முன்பு காத்துக்கொள்ளும் குறிக்கோள் நிலைபொறுவதாக.

விளக்கம் : குறிக்கோள் வாழ்வினர் குற்றப்படுவதில்லை. குறிக்கோள் அற்றவரே மடைமாற்றம் இன்றிக் குற்றப் படுகின்றனர்.

தடுமாற்றம் தகர்ந்தால் குற்றம் தகரும். எரி தீயின் துரும்பாய் இடர்ப்பட வேண்டியதில்லை.

தெளிவு : கொள்கை வேலி வருமுன் காக்கும்.

மூலம் : வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும்—435

57. அறனறி மூத்த அறிவே போற்றி

பொருள் : அறநெறியை அறிந்து முதிர்ந்த அறிவு அமைவதாக.

விளக்கம் : வழி வழி வருவது ஒழுகலாறு. உயர்வு அதனின் உயர்நோக்கம்.

உயர்ந்தாரின் ஒழுகலாறை நினைந்து ஒழுகுவது உய்த்துணர்வு. உய்த்துணர்வார் உயர்வார்.

ஒழுங்கு அறத்தின் ஒளி. அறஒளி அறிந்தார் முதிர்ந்த அறிவராவார்.

தெளிவு : அறவழி வழங்கும் அழகிய அறிவொளி.

மூலம் : அறனறிந்து மூத்த அறிவுடையார் கேண்மை
திறனறிந்து தேர்ந்து கொளல்—441.

58. பெரியரிற் பெரிய பேறே போற்றி.

பொருள் : வயதில் முதிர்ந்த பெரியாரினும் அறிவில் முதிர்ந்த பெரியாரைப் போற்றும் பண்பு வளர்வதாக.

விளக்கம் : வயது முதிர்ந்தாலும் அறிவு முதிர்ச்சி அடையார் அகவை குறைந்தாலும் அறிவு மிகுந்தார் பெரியரிற் பெரியார். பெரியார் நன்மை பெரியது. பெரியாரைப் பற்றுவார் வாய்ப்பு அதனினும் பெரியது.

தெளிவு : நடையழகு நல்கும் பெரியார் நன்னெறி.

மூலம் : தம்மிற் பெரியார் தமரா ஒழுகுதல்
நன்மையுள் எல்லாம் தலை—444.

59. மன்னுயிர் தாங்கும் மனநலம் போற்றி.

பொருள் : வாழும் உயிரைக் காக்கும் மனநலம் வாழ்வதாக.

விளக்கம் : ஓங்கு புகழால் உயிர்நிலை பெற்று ஒளிரும். ஓங்கு புகழாளர் சிற்றினஞ் சேரா உயர்ந்தார்.

அறிவு, சிந்தனை, சொல், செயல் ஆகிய வற்றான் தீது நினையா ஆண்மை சிற்றினஞ் சேராமை அச்சீர்த்தியால் இனம் ஆக்கமுறும் அழகிய மனநல ஆக்கமும் அது.

தெளிவு : சிற்றினஞ் சேரார் மன்னுயிர் தாங்குவார்

மூலம் : மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்—457.

60. தக்கதே செய்யும் தகையே போற்றி.

பொருள் : தகுந்தவற்றைச் செய்யும் பண்பு தழைவதாக.

விளக்கம் : செய்யத் தக்கனவற்றைச் செய்யாமை
செய்யத் தகாதனவற்றைச் செய்தல்
தெரிந்து செய்யாரின் திறக்குறை.

தெளிவு : தகுந்த தென்பது தெரிந்து செய்வது.

மூலம் : செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க
செய்யாமை யானும் கெடும்—466.

61. அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி

பொருள் : தனது வலியறிந்து வாழும் திறமை வளர்வதாக.

விளக்கம் : அமைந்து ஒழுகுதல் என்பது தன் வலிமையின் அளவு அறிந்து நிற்பது.

வாழ்வின் வெற்றி தன்வலி அறிதலாலும், கேடு தன் வலி அறியாமையாலும் வருவதாம்.

தெளிவு : அளவு நடையால் வெற்றி அகப்படும்.

மூலம் : அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கெடும்—474

62. செய்தற் கரிய செய்கையே போற்றி.

பொருள் : செய்வதற்கு அரியது என்பதனைச் செய்யும் திறம் சிறப்பதாக.

விளக்கம் : வெற்றிக்குக் காலம் பெரிய வாய்ப்பு.

காலம் கைகூடிய பொழுதும் செய்யார் அரியவற்றைச் செய்வார் என்று கருதப்படார்.

தெளிவு : காலம் கூடின் ஞாலம் கூடும்.

மூலம் : எய்தற்கு அரியது இயைந்தக்கால அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்—489

63. அஞ்சாத் துணிவே துணையே போற்றி.

பொருள் : அச்சம் அற்ற துணிவு அரணாவதாக.

விளக்கம் . அச்சம் அறியாமையால் ஆவது. ஆராய்வார் அச்சம் அகற்றுவார்.

இடந்தெரிந்து உறுதியோடு வினைசெய்வார் எதற்கும் அஞ்சார். அஞ்சாமை துணிவு மட்டுமன்று அதுவே அதற்குகுத் துணையும் ஆம்.

தெளிவு : அச்சம் அகற்றி அஞ்சார் ஆகுக.

மூலம் : அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தாற் செயின்—497.

64, திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி

பொருள் : துணையாவரின் திறத்தைத் தெரிந்து செயற் படும் தெளிவு தழைப்பதாக.

விளக்கம் : அறிவு, ஆற்றல், செய் திறன், பண்பாடு ஆகியவை திறனறியும் அகப்புறக் கூறுகள்.

ஆராய்ந்து தெளிந்தார் அன்பும் நம்பிக்கையும் உடையாரை அடைவார்.

அறம்பொருளை அஞ்சிக் காப்பாரும் அவரே.

தெளிவு : ஆராய்ந்தறிதல் திறனுக்கழகு.

மூலம் : அறம்பொருள் இன்பம் உயிர்அச்சம் நான்கின்
திறந்தெரிந்து தேறப்படும்—501.

65. வாரி வழங்கும் வகையே போற்றி

பொருள் : பொருள் வரும் வழியறிந்து பெருக்கும் நெறி பொலிவதாக.

விளக்கம் : உழவினால் இயற்றுதல் ஒல்லும்-வணிகத்தால் ஈட்டுதல் முடியும். இவைபோல்வன யாவும் வாரி பெருக்கும் வழி என்ப.

தெளிவு : வழிகண்டு முயன்றால் வளங்கள் பெருகும்.

மூலம் : வாரி பெருக்கி வளப்படுத்து உற்றவை
ஆராய்வார் செய்க வினை—512

66. அளவ ளாவும் அழித்தே போற்றி.

பொருள் : மனம் கலந்து பழகும் இனிமை வளர்வதாக.

விளக்கம் : அன்போடு கலந்து பழகுதல் அளவளாவுதல் அன்புடைய சுற்றத்தோடு கலந்து பழகாதவன் அன்புடையாளன் ஆகான்.

கரையில்லாக் குளத்து நீர் கழிந் தொழியும். கலந்து பழகாதான் வாழ்வும் பயனற்றுக் கெடும்.

தெளிவு : கலந்து பழகுதல் காப்பீ டாகும்

மூலம் : அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளவாக்
கோடுஇன்றி நீர்நிறைந் தற்று—523.

67. சுற்றம் சுற்றும் சுடரே போற்றி.

பொருள் : உறவினர் சுற்றுமாறு வாழும் சுடர் ஒளி விளங்குவதாக.

விளக்கம் : சுற்றிச் சூழ்வது சுற்றம். சுற்றத்தார் சுற்றுமாறு வாழ்வது சுடர் வாழ்வு.

ஆக்கிய செல்வத்தைச் சுற்றத்தார்க்கு ஆக்கினால் சுற்றம் சுற்றி அரணாகும்.

ஆக்கமாகும் செல்வத்தைப் பெற்றதன் பயனும் அதுவாம்.

தெளிவு : சுருங்கா வாழ்வைச் சுற்றம் தருஉம்.

மூலம் : சுற்றத்தால் சுற்றப் படவொழுகல் செல்வம்தான்
பெற்றதாற் பெற்ற பயன்—524

68. புகழ்ந்தவை புரியும் புகழே போற்றி.

பொருள் : உயர்ந்தாரால் போற்றப்படும் செயல்களைச் செய்யும் புகழ்நெறி சிறப்பதாக.

விளக்கம் : உலகோர் பயன்பெற உழைப்பது உயர்ந்தார் புகழ்ந்தவை.

அவ்வழிச் செல்வார் உயர் புகழ் அடைவார்.

தெளிவு : பயன் தரும் உழைப்பால் புகழ்ப்பொலி வோங்கும்.

மூலம் : புகழ்ந்தவை போற்றிச் செயல்வேண்டும் செய்யாது
இகழ்ந்தார்க்கு எழுமையும் இல்—538

69. கோலது கோடாக் கொற்றமே போற்றி

பொருள் : ஆளும் செங்கோல் சாயாவாறு ஆட்சி செய்யும் ஆளுமை நிலை பெறுவதாக.

விளக்கம் : வேந்தர்க் கொளி செங்கோல் மாட்சி. வெல்லும் வேலினும் செங்கோல் நன்மையை விளை விக்கும்.

அன்பு, அரவணைப்பு, பற்று, பதவி, வளம் போன்ற வற்றில் ஒரு சார்பு அற்றநிலை செங்கோன்மை நிலைய தாம்.

அஃதிலான் நல்லாட்சி ஆளன் ஆகான்

தெளிவு : ஆட்சிக் கிலக்கணம் ஆளும் செங்கோல்

மூலம் : வேலன்று வென்றி தருவது மன்னவன்
கோலதூஉம் கோடாது எனின்—546.

70. குடிபுறங் காக்கும் குணமே போற்றி.

பொருள் : குடிமக்கள் பிறரிடம் சென்று வருந்தாமல் காத்து வாழும் குணமுடைய வேந்தனை போற்றிக் கொள்ளுக.

விளக்கம் : காக்கும் வேந்தன் காரணமின்றி ஒறுப்புக்குக் கட்டளையிடான். கடிதல் பிறர்பிழை கைக்கொள்ளா தொழுகவே. அது அவனுக்கு வடு அன்று. ஆளும் முறைமைக்கு அரண்.

தெளிவு : குடையானுக் கழகு காத்தலும் கடிதலும்.

மூலம் : குடிபுறங் காத்தோம்பிக் குற்றம் கடிதல்
வடுவன்று வேந்தர் தொழில்—549.

71. ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி

பொருள் : தக்கபடி சீர்தூக்கித் தண்டிக்கின்ற செங்கோல் சிறப்பதாக.

விளக்கம் : நடுவுநிலையோடு குற்றம் நோக்கி குற்றத்திற்குத் தக்கபடி தண்டனை நல்குதலை 'ஒத்தாங்கு' என்பர் நல்லோர்.

நடுநிலை பிறழாமை வேந்தனின் நல்லுரனுக்கு நற்சான்று.

தெளிவு : ஒறுப்பில் நடுநிலை வேந்தர்க் கொளியாம்.

மூலம் : தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தாய்
ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து—561

72. கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி

பொருள் : கண்ணால் நிலையறிந்து இரக்கம் காட்டும் கனிவு சிறந்ததாக.

விளக்கம் : உலகு வாழ உதவுவது ஒளியுடைய கண்ணோட்டம். உயிரைக் காத்து உயர்த்தி நிலைப்படுத்துவதும் அவ்வுயிர் ஓட்டமேயாம்.

தெளிவு : ஒளி சீர் கண்ணோட்டம் உலகை ஓம்பும்

மூலம் : கண்ணோட்டம் என்னும் கழிபெருங் காரிகை
உண்மையான் உண்டுஇவ் உலகு—571

73. உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி

பொருள் : அழியாத உள்ளத்தை உடைமையாக்கும் சீர்மை உயர்வதாக.

விளக்கம் : செல்வம் தோன்றி அழிதற்கு உரியவை, உறுதியான உள்ளம் ஒன்றே ஊக்கி உயர்த்தும் வலிமை உடையது.

உள்ளம் மனத்திற்கு ஆகி வந்து உடைமை ஆயிற்று. ஊக்கம் அதனின் உயர்கொடை.

தெளிவு : ஒழியா உடைமை உள்ளம் உடைமை.
மூலம் : உள்ளம் உடைமை உடைமை பொருளுடைமை
நில்லாது நீங்கி விடும்—592.

74, நீரள வுயரும் மலருளம் போற்றி

பொருள் : நீர் உயரும் அளவு நீரில் நிற்கும் மலர்த் தண்டு நீள்வது போல் உயர்ந்த மனம் ஒளிர்வதாக.
விளக்கம் : நீரால் மலர்த்தண்டு நீளும். மன உணர்வால் நன்னினைவு வளரும்.
மலர் நெஞ்சுக்கு ஆகி வந்தது இக்குறிக்கோளை விளக்குவான் வேண்டியாம்.
தெளிவு : உயர்ந்த எண்ணம் உறுதுணை யாகும்.
மூலம் : வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத்து அனையது உயர்வு—595.

75. குடியெனும் குன்றா விளக்கே போற்றி.

பொருள் : அணையாத விளக்கு அனைய குடியாளனும் குடிப்பண்பு ஓங்குக.
விளக்கம் : உலக நடை அறிவு, உள்ள உரம் குடியாளர் இலக்கணம் என்று ஓதுவர்.
ஒளிதரும் குடியார் சோம்பாமை உடையார். சோம்பாத் தன்மை குன்றா விளக்கின் மேல் ஏற்றிச் சொல்லப் பட்டது.
தெளிவு : கொள்கைக் குடியார் சோம்பலுக் கிடங் கொடார்.
மூலம் : குடி என்னும் குன்றா விளக்கம் மடிஎன்னும்
மாசுவர மாய்ந்து கெடும்—601.

76. அறிவறிந் தாற்றும் ஆளுமை போற்றி

பொருள் : அறிவின் வழியில் எச்செயலையும் ஆராய்ந்து செய்கிற ஆளுமை அமைவதாக.

விளக்கம் : மன ஆளுமை மடியை விரட்டுவது. வினை ஆளுமை மாற்றார் வலியறிவது.

இவற்றை அறிந்தார் எவற்றையும் எதிர்கொள்ளலாம். அறிவறிந்து ஆற்றுதல் என்பதும் இது.

தெளிவு . வெற்றியின் வாயில் மனவினை ஆளுமை-

மூலம் : பொறியின்மை யார்க்கும் பழியன்று அறிவறிந்து
ஆள்வினை இன்மை பழி—618

## 77. அடுக்கும் இடுக்கணை அழிப்பாய் போற்றி

பொருள் : தொடர்ந்து வரும் துன்பத்தை அழிக்கும் ஆற்றல் துலங்குவதாக.

விளக்கம் : அடுக்கு—கட்டிடம் போன்று அடுக்குவதன்று. ஒன்றாகியும் வரும். ஒன்று பலவாகியும் வரும். வெவ்வேறு வழியிலும் அவ்வாறு தொடர்ந்து வரும் துன்பத்தை அடுக்கும் இடுக்கண் என்றார்,

அறிவால் அதன் கூர்ப்பு அறிந்து அழித்தல் ஆளுமை அறிவின் முன்னர் அடுக்கி வரும் துன்பம் இடர்ப்பட்டு அழியும்.

தெளிவு : அடுக்கும் துன்பின் ஆளுமை அழிக்கும்.

மூலம் : அடுக்கி வரினும் அழிவிலான் உற்ற
இடுக்கண் இடுக்கட் படும்—625

## 78. இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி.

பொருள் : இன்பம் தரும் இன்பத்தை விரும்பாத இயல்பு இலங்குவதாக.

விளக்கம் : தானே இன்பம் வந்து இயைந்த போதிலும் அதனை ஒரு பொருட்டாக எண்ணாதான் சமச்சீர்மை தாங்குவான்.

சமச்சீர்மை துன்புறும் பொழுதும் துவளாமை.

தெளிவு : எண்ணிச் சிறந்தால் எல்லாம் இனிதே.

மூலம் : இன்பத்துள் இன்பம் விழையாதான் துன்பத்துள்
துன்பம் உறுதல் இலன்—629

79• மதிநுட்பம் நூலோ டுடையாய் போற்றி.

பொருள் : இயற்கையான அறிவு நுட்பமும் நூல் நுட்பமும் இணைந்து விளங்குவதாகுக.

விளக்கம் : அறிந்து சொல்ல அடிப்படை ஆவது நுட்ப அறிவு. அவ ஆற்றல் நூல் நுட்பத்துடன் இணையும் பொழுது மிகுதிப்படும்.

தெளிவு : மதி நூல் நுட்பம் வினையின் மேன்மை

மூலம் : மதிநுட்பம் நூலோ டுடையார் கதிநுட்பம் யாவுள முன்நிற் பவை—636

80. உலகத் தியற்கை உணர்வோய் போற்றி

பொருள் : உலக நடையை உணர்ந்து ஒழுகும் பண்பு ஓங்குவதாக.

விளக்கம் : உலக நடைமுறை இயற்கையோடு ஒட்டியது. உலகத்தார் செயற்கையோடு ஒட்டார்.

செயற்கை சிறந்ததாயினும் இயற்கையொடு செறியா தாயின் சிறவாது. சிறக்கும் செயற்கை இயற்கையின் செழிப்பே.

எவ்வினையும் இயற்கைக்கு மாறாயின் ஏற்றுப் பொருந்துதல் இல்லை. ஏற்றுப் பொருந்தல் உலக நடைமுறை என்க.

தெளிவு : ஒவ்வுதற் குரியது உலகத்தியற்கை.

மூலம் : செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செயல்—637

81. நிரந்தினிது சொல்லும் நீர்மையேபோற்றி

பொருள் : சொல்லும் கருத்துக்களை முறைப்படுத்தி இனிமையாகச் சொல்லும் முறை சிறப்பதாக.

விளக்கம் : எண்ணி, சிறக்கச் சொல்லும் சொல்லை வியந்தும், மகிழ்ந்தும் கேட்டுப் பயன் பெறுவர் என்ப தால் 'நிரந்தினிது' சொல்லுக என்றார்.

தெளிவு : வல்லார் சொல்வழி ஞாலம் விரையும்.
மூலம் : விரைந்து தொழில் கேட்கும் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்—648

82. வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி

பொருள் : விரும்பும் யாவற்றையும் ஆக்கி வழங்கும் வினைத்தூய்மை வளர்வதாக.

விளக்கம் : வினைக்கு வேண்டுவது துணைமை. வினை நலத்திற்கு வேண்டுவது தூய்மை.

துணைமை ஆவது நன்மையும் செல்வமும். தூய்மையை அறம், தரும் வேண்டுவன யாவும் அவற்றால் விளையும்.

தெளிவு : தூய்மை செயலில் தாங்கித் துலங்குக.
மூலம் : துணை நலம் ஆக்கம் தரூஉம் வினைநலம்
வேண்டிய ஏலாம் தரும்–651

83. நடுக்கறு காட்சி நயனே போற்றி

பொருள் : கலக்கம் அற்றுச் சிறந்த அறிவு கூடுவதாக

விளக்கம் : நடுக்கு அற்ற தன்மை தெளிவுடைய நிலைப்பாடு. நன்னெறி நிற்கும் தன்மையர் கலங்காத நெஞ்சினர்.

துன்பத்தில் சிக்குறும் பொழுதிலும் சிதையாத வினைத்தூய்மையர். தவறியும் இழிந்தது எண்ணாததறு கண்மையர்.

தெளிவு : நடுங்கா நெஞ்சம் நன்னெறி நிற்கும்.
மூலம் : இடுக்கண் படினும் இளிவந்த செய்யார் நடுக்கற்ற
காட்சி யவர்–654.

84. சொல்லிய செய்யும் சுடரே போற்றி

பொருள் : சொல்லியவாறு செய்து ஒழுகும் சீர்மை சிறப்பதாக.

விளக்கம் : தெளிந்த மனமுடையவர் செய்வதற்குரியவற்றைச் சொல்வார்.

தெளிவிலார் செய்ய வியலாதவற்றைச் சொல்வார்.

தெளிவு : திட்பம் தாங்கும் செயல்ஒளிச் சீர்மை

மூலம் : சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்-664

85. வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி

பொருள் : செயல் திறத்தினால் சிறந்து விளங்கும் தன்மை செழிப்பதாக

விளக்கம் : 'செயல் திட்பத்தாலும், செய்திறம் நுட்பத்தாலும் சிறக்கும்.

செயல் முற்றாகும் பொழுது சீரும் புகழும் சேரும்.

தெளிவு : சீரும் புகழும் செய்திறன் சேர்க்கும்

மூலம்: வீறெய்தி மாண்டார் வினைத்திட்பம் வேந்தர்கண்
ஊறெய்தி உள்ளப் படும்-665

86. நூலருள் நூல்வல நுண்மையே போற்றி

பொருள் : நூலறிவு உடையவர்க்கும் நுட்பம் கூறும் அறிவு நிலைபெறுவதாக.

விளக்கம் : வல்லார் முன் வெற்றி கொள்வது போர் வலிமை. கற்றார் முன் வெற்றி கொள்வது கல்வி வலிமை.

தெளிவு : கற்றார் போற்ற உரைக்கக் கற்க.

மூலம் : நூலாருள் நூல் வல்லன் ஆகுதல் வேலாருள்
வென்றி வினையுரைப்பான் பண்பு-683.

87. தூய்மை துணைமை துணிவே போற்றி

பொருள் : தூய்மையைத் துணையாகக் கொண்டு வாழும் துணிவு சிறப்பதாக.

விளக்கம் : காமமும், பொருளும் விரைந்து மனத்தைக் கெடுக்கும்.

கெடுக்கும் அவற்றுக்கு இடங்கொடாமை தூய்மை.
வளையாத உறுதி துணைமை.
வழுவாத எதிர்ப்பு துணிவு.

தெளிவு : துணிந்து தூய்மை தாங்கித் துலங்குக.

மூலம் : தூய்மை துணைமை துணிவுடைமை இம்மூன்றின்
வாய்மை வழியுரைப்பான் பண்பு-688.

88. போற்றற் கரியவை போற்றியே போற்றி

பொருள் : பொறுத்தற்கு அரிய குற்றங்கள் வாராமல் தன்னைக் காத்துக் கொள்ளும் வல்லமை வாழ்வதாக.

விளக்கம் : தன்னைத் துன்புறுத்துதல்
பிறரைத் துன்புறுத்துதல்
என்ற இரண்டில் 'பிறரைத் துன்புறுத்தும் குற்றம்' பொறுத்தற்கரியதாம்.

தெளிவு : தவறா ஒழுக்கம் குற்றம் தகர்க்கும்.

மூலம் : போற்றின் அரியவை போற்றல் கடுத்தபின்
தேற்றுதல் யார்க்கும் அரிது-693.

89. குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி

பொருள் : மனக்குறிப்பை அறிந்து கொள்ளும் குறிப்பு அறிவு வளர்வதாக.

விளக்கம் : குறிப்பு, முகம், கண் போன்றவற்றைக் குறித்தது. அது கொண்டு அறிவது உள்ளக் குறிப்பு.

அக்குறிப்பறிய வல்லாரை அவர் விரும்புவன அளித்துத் துணையாக்கிக் கொள்ளல் வேண்டும்.

தெளிவு : கூறாமை நோக்கிக்கூறல் குறிப்பு.

மூலம் : குறிப்பின் குறிப்புணர்வாரை உறுப்பினுள்
யாதும் கொடுத்துக் கொளல்—703.

90. ஒளியார் முன்னுறும் ஒளியே போற்றி

பொருள் : அறிவு மிகுந்தார் அவையில் தம்மை அறிவில் முதன்மையராய் வெளிப்படுத்தும் அறிவு ஓங்குவதாக.

விளக்கம் : ஒளி அறிவின் வீச்சு. அவ்வீச்சால் ஊடுருவி அறிவார் முந்துவார்.

தெளிவு : அறிவர் வீச்சு முதன்மை ஆகும்.

மூலம் : ஒளியார்முன் ஒள்ளியர் ஆதல் வெளியார்முன்
வான்சுதை வண்ணம் கொளல்—714

91. கற்றவை செலச்சொல் கலையே போற்றி

பொருள் : தாம் கற்றவற்றை கற்றவர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு சொல்லும் கலையறிவு பெருகுவதாக.

விளக்கம் : கற்றல் கசடறக் கற்றல். கசடறக் கற்றார்க்குத் தெளிவு கை கூடும். தெளிந்தார், கற்றார் ஏற்கின்ற கருத்துரைக்கும் திறன் தாங்குவர்.

தெளிவு : தெளிந்தார் சீர்மொழி ஞாலம் செல்லும்

மூலம் : கற்றாருள் கற்றார் எனப்படுவார் கற்றார்முன்
கற்ற செலச் சொல்வ வார்—722

92. நாடா வளத்ததாம் நாடே போற்றி

பொருள் : முயற்சி செய்து தேடாத வளமுடைய நாடு வாழ்வதாக.

விளக்கம் : வளம் இருவகையது. அமைந்தவளம், ஆக்கும் வளம் என்பவை அவை.

அமைந்தவளம் இயற்கை அருமையது. ஆக்கும் வளம் உருவாக்கத்தால் ஆவது.

இயற்கை வளமுடையார் முயன்று தேட வேண்டுவது என்று ஒன்று இல்லை.

தெளிவு : வளந்தரும் இயற்கை நாட்டை வளர்க்கும்.

மூலம் : நாடென்ப நாடா வளத்தன நாடல்ல
நாட வளம் தடும் நாடு—739.

93. அன்பீன் குழவியாம் அருளே போற்றி

பொருள் : அன்பு பெற்று அளித்த அருள் வளர்வதாக.

விளக்கம் : அன்பின் முதிர்ச்சி அருள். அருளை ஆள்வது அறிவு. அறிவால் ஆவது ஆக்கம்.
தெளிவு : அன்பின் ஆக்கம் அறிவருள் ஆகும்.
மூலம் : அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு—757

94. அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி

பொருள் : அருளாகிய குழந்தையை வளர்க்கும் வளர்ப்புத் தாயான பொருள் சேர்வதாக.
விளக்கம் : அன்பால் அருள்பிறக்கும்.
அவ்வருள் வறியார்மேல் செல்லும்பொழுது பொருள் இல்லையேல் அருளால் பயனில்லை.
மூலம் : அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னும்
செல்வச் செவிலியால் உண்டு—757

95. நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி

பொருள் : வளரும் தன்மையுடைய அறிவுடையார் நட்பு வளர்வதாக.
விளக்கம் : அறிவுடையார் நட்பு பிறைமதி போலும் வளரும் அருமையது. அறிவிலார் நட்பு முழுமதி போலும் தேயும் அமைவினது.
தெளிவு : தேயா நட்பு சேர்க்கும் செந்நெறி
மூலம் : நிறைநீரநீரவர் கேண்மை பிறைமதிப்
பின்நீர பேதையார் நட்பு—782

96. உள்ளம் பெருகுவ உள்ளுகை போற்றி

பொருள் : உயர்வுக்கு அடிப்படையான எண்ணங்கள் நிறைந்து ஒளிர்வதாக.
விளக்கம் : உயர்ந்த எண்ணங்களுக்கு ஊக்கம் அடிப்படை ஊக்கம் என்பது அசையா உள்ளம். அவ்வுள்ளம் எதிர் கொள்ளும் துன்பத்தை எதிர்த்து அழிக்கும். அசைதல்: சோர்வு.

துன்பத்தின் அழிவால் இன்பத்திற்குக் காரணமான உயர்ந்த எண்ணங்கள் உள்ளத்தில் ஊறி நிறையும்.

தெளிவு : உயர்ந்தார் ஊக்கம் உயர்நினை வாக்கும்.

மூலம் : உள்ளற்க உள்ளம் சிறுகுவ கொள்ளற்க
அல்லற்கண் அற்றறுப்பார் நட்பு—798

97. கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி

பொருள் : பிறர் சொன்னாலும் நண்பரின் பிழையை ஏற்றுக் கொள்ளாத குணநெறி சிறப்பதாக.

பொருள் : உரிமை எடுத்துக் கொண்டு நண்பர் செய்யும் செயலிலும் பிழை உண்டாகலாம். அவ்வாறு உண்டாயினும் அதனைப் பொறுப்பது அழகாகும்.

தெளிவு : குற்றம் பொறுக்கும் குணத்தார் ஆகுக.

மூலம் : கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை வல்லார்க்கும்
நாளிழுக்கும் நட்டார் செயின்—808.

98. இகலென்னும் எவ்வம் இல்லாய் போற்றி.

பொருள் : மாறுபாட்டினால் வரும் துன்பம் இல்லாத தன்மை மலர்வதாக.

விளக்கம் : மாறுபாடு நீங்கினால் மனம்விரியும். மனவிரிவால் தீ நினைவு விலகும்.

தீ நினைவு நோய் அனையது. துன்பம் தருவது. துன்ப நோய் நீங்கினால் புகழேறித் துலங்கலாம்.

தெளிவு : நோய்நினை வறுத்தால் நுண்புகழ் நீளும்

மூலம் : இகலென்னும் எவ்வநோய் நீங்கின் தவல்இல்லாத்
தாவில் விளக்கம் தரும்—853.

99. பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி.

பொருள் : பகைவரையும் நண்பராக ஆக்கிக் கொள்ளும் பகைத்திறம் தெரிந்த பண்பு பொலிவதாக.

விளக்கம் : பொருதும்வரை பகைபாராட்டல் போர்முறை. போரொடு பகை போகும்.

பகைத்திறம தெரிந்து பகையை நட்பு ஆக்கிக் கொள்வ தனாலும் பகைவிலகும் பகைவனுக்கு அருளும் பண்பாட் டால் பெருமை பெருகும். பெருமை பிறங்கும்.

தெளிவு : பகையை விலக்கும பண்பைப் பெறுக.

மூலம் : பகைநட்பாக் கொண்டொழுகும் பண்புடை யாளன்
தகைமைக்கண் தங்கிற்று உலகு—874

100. அளவறிந் துண்ணும் அறிவே போற்றி.

பொருள் : உண்ணும் அளவை அறிந்து உண்ணும் அறிவு நெறி ஓங்குவதாக.

விளக்கம் : உண்டது செரியாமல் உண்ணுவதும் ஒவ்வா தனை ஓதுக்குவதும் அறிவுடைமை.

அளவு செரித்தலை அறிவிப்பது. அளவு தாண்டல் ஆகாது.

தெளிவு : அறிவின் சீர்மை அளவறிந் துண்ணல்

மூலம் : அற்றால் அளவறிந்து உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு—943.

101. செப்பமும் நாணும் சேர்வே போற்றி

பொருள் : நடுநிலையும் பழிக்கஞ்சும் நற்குணமும் சேர்ந்த குடிப்பண்பு நிலைப்பதாக.

விளக்கம் : குடி செல்வாக்கு கொண்டது. புகழும் பெருமையும் பெற்றது.

குடியின் செழுமைக்கு நடுவுநிலையும் நாணும் கோட் பாடு. குடியின் இயல்பும் இது என்று கூறுப.

தெளிவு : நற்குடிக் கழகு நடுநிலை நாணம்

மூலம் : இற்பிறந்தார் கண்ணல்லது இல்லை இயல்பாகும்
செப்பமும் நாணும் ஒருங்கு—951.

102. பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி.

பொருள் : செல்வம் பெருகிய பொழுதில் பணியும் பண்பு பொலிவதாக.

விளக்கம் : செல்வம் செருக்குதரும். தீ நெறியில் சென்று சேர்க்கும்.

பெருகிய பொழுதில் பணிந்தும், சுருங்கிய பொழுதில் உயர்ந்தும் நிற்றல் செல்வர்க்கழகு.

பணிவு பெருக்கத்திற்குச் சொல்லப்பட்ட பண்பு. பணியாமை சுருக்கத்திற்குச் சொல்லப்பட்ட உயர்வு.

தெளிவு : செல்வத்துப் பணிதல் சீரைச் சேர்க்கும்.

மூலம் : பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்தி வேண்டும் உயர்வு—953.

103. உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி

பொருள் : உள்ளத்தின் ஊக்கமிகுதி உயர்வதாக.

விளக்கம் : ஊக்கம் ஒளி அனையது. அம் முனைப்பு தாங்கியார் அரியவை ஆக்குவார்.

அஃதிலார் உயிர்வாழ எண்ணுவார் அன்றி ஒளிதர உண்ணுவார் அல்லர்.

தெளிவு ; பெருகிய ஊக்கம் பெருமை தாங்கும்.

மூலம் : ஒளியொருவற் குள்ள வெறுக்கை இளியொருவற்
கஃதிறந்தும் வாழ்தும் எனல்—971

104. கொல்லா நலத்ததாம் போற்றி

பொருள் : கொலை செய்யாத நலநெறி வாழ்வதாக.

விளக்கம்: உயிர்க்கொள்கை ஒருவர்க்கு ஒருவர் உததுவுவது ஒன்று இன்னொன்றை அழிப்பது அன்று.

அழிப்பு ஆக்கமாகாது. ஆக்கமாகாதவற்றுக்கு உலகம் ஒப்புதல் அளிக்காது.

தெளிவு : உலகம் ஒப்பா உயிர்க்கொலை ஒழிக.

மூலம் : கொல்லா நலத்தது நோன்மை பிறர்தீமை
சொல்லா நலத்தது சால்பு—984.

105. நயனொடு நலம்புரி பயனே போற்றி

பொருள் : நீதியும் நன்மையும் நினைந்து ஒழுகும் நெறி நீள்வதாக.

விளக்கம் : தம்மையும் பிறரையும் தாங்குவது நீதியும் நன்மையும். நீதிக்கும் நன்மைக்கும் போரிடுவார் நன்னெறியார்.

பயன்தரப் பாடாற்றுவாரை உலகம் பாராட்டும். பயன்பெறப் பார்ப்பாரை வெறுத்துப் புறந்தள்ளும்.

தெளிவு : நெஞ்சின் நன்னெறி நீதியும் நன்மையும்.

மூலம் : நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு—964.

106. சீருடைச் செல்வ மாரியே போற்றி.

பொருள் : சிறந்த மழைபோல வழங்கும் செல்வ மனம் சிறப்பதாக.

விளக்கம் : வறுமை முடிந்த முடிவல்ல. வாரா மழை போன்றது வறியநிலை.

பொய்யா மழையால் பின்னர் வளம் பெறுவது போல புகழுடைய செல்வரின் செல்வமும் பின்னர் பயன்படும்.

தெளிவு : பயன்தரும் மாரியாய் வாழ்வது பண்பு.

மூலம் : சீருடைச் செல்வர் சிறுதுனி மாரி
வறங்கூர்ந் தனையது உடைத்து—1010.

107. கருமத்தால் நாணும் நானே போற்றி.

பொருள் : செயலை நாணுவதற்குரிய இழிந்த செயல் நினையாத நலம் நிலைப்பதாக.

விளக்கம் : நன்றல்லதைச் செய்வதற்கு நாணுவது நாணம். நற்குடியாரின் நல்லியல்பஃது.

தெளிவு : இழிந்தது எண்ணா இயல்பராய் எழுக.

மூலம் : கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற–1011.

108. உழுதுண்டு வாழும் வாழ்வே போற்றி

பொருள் : உழுது உணவுப் பொருளை உண்டாக்கி வாழும் உயர்ந்த வாழ்வு ஓங்குவதாக,

விளக்கம் . உழுவார் கொடுத்து உயர்வார். உழுதல் அற்றார் கேட்டு உயிர் ஓம்புவார்.

வாழ்வு வழங்குவதால் வளம் பெறுவது. வளம்பெற நிலனும், நெஞ்சும் உழுது வாழ்க!

தெளிவு : வள்ளல் நெறியை வையம் வாழ்த்தும்.

மூலம் : உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்—1033.

# திருக்குறள் போற்றி

## இளங்குமரனார்

1. அகர முதலாம் ஆதியே போற்றி-1
2. மலர்மிசை ஏகும் மாணடி போற்றி-3
3. தனக்குவமை இல்லாத் தகையடி போற்றி-7
4. எண்குணத் திலங்கும் இறையே போற்றி-7
5. அமிழ்த மழையாம் அருளே போற்றி-11
6. ஐம்பொறி அடக்கும் ஆற்றலே போற்றி-24
7. நிறைமொழி அருளும் நிறைவே போற்றி-28
8. குணமெனும் குன்றே குறியே போற்றி-29
9. மனத்தில் மாசிலா மணியே போற்றி-34
10. வாழ்வாங்கு வாழும் வாழ்வே போற்றி-50
11. மங்கல மனையற மாட்சியே போற்றி-60
12. அறிவறி பண்புப் பேறே போற்-றி61
13. அன்போடு இயைந்த வழக்கே போற்றி–73
14. வருவிருந்து ஓம்பும் வளமே போற்றி-83
15. இன்சொல் வழங்கும் இயல்பே போற்றி-99
16. செய்யாமற் செய்யும் செழுநலம் போற்றி-101
17. காலத் துதவும் கனிவே போற்றி-102

18. நெஞ்சங் கோடா நெறிநிலை போற்றி-118
19. நிலையில் திரியா மலையே போற்றி-124
20. ஒழுக்கம் குறையா உரமே போற்றி-139
21. பொறுக்கும் அழியாப் புகழே போற்றி-156
22. அழுக்கா றில்லா அறனே போற்றி-163
23. அறனறிந்து வெஃகா அறிவே போற்றி-179
24. புறஞ்சொலல் அறியாப் பொலிவே போற்றி-183
25. பயனில பகராப் பண்பே போற்றி-197
26. பிறன்கே டெண்ணாப் பெருமையே போற்றி-204
27. ஒத்தது அறியும் உயர்வே போற்றி-214
28. ஊருணி நீராம் உடைமையே போறள-215
29. பயன்மரம் ஆகும் பரிவே போற்றி-216
30. மருந்து நலமாம் மாண்பே போற்-றி217
31. வறியார்க் குதவும் வாழ்வே போற்றி-221
32. பசித்துயர் மாற்றும் பரமே போற்றி-225
33. வசையிலாப் புகழே வானே போற்றி-240
34. தன்னுயிர் அஞ்சாத் தகவே போற்றி-244
35. அல்லல் அறியா அருளே போற்றி-245
36. உயிரழித் துண்ணா ஒளியே போற்றி-259
37. தன்னுயிர்த் தானறு தவமே போற்றி-268
38. கூற்றையும் வெல்லும் நோற்றலே போற்றி-269
39. அளவறி நெஞ்சத் தறமே போற்றி-288
40. உள்ளத்தாற் பொய்யா ஒழுக்கமே போற்றி-294
41. வெகுளியை மறக்கும் விரிவே போற்றி-3 3
42. இன்னாமை எண்ணா இனிமையே போற்றி-314

43. பகுத்துண் டோம்பும் பரிவே போற்றி-322

44. நிலைபே றுணரும் நிலையே போற்றி-331

45. பற்றது பற்றா பற்றே போற்றி-348

46. மெய்ப்பொருள் உணரும் மேன்மையே போற்றி-352

47. ஐயம் அணுகாத் தெளிவே போற்றி-354

48. சிறப்பென்னும் செம்பொருட் செறிவே போற்றி-358

49. பேரா இயற்கைப் பெற்றியே போற்றி-370

50. அசையா உறுதி ஆக்கமே போற்றி-371

51. முறைசெய் தருளும் இறையே போற்றி-388

52. உலகோ டுவப்புறும் உறவே போற்றி-399

53. நுண்மாண் நுழைபுல நோன்பே போற்றி- 407

54. ஆவ தறியும் அறிவே போற்றி-427

55. எதிரதாக் காக்கும் இயல்பே போற்றி-429

56. வருமுன் காக்கும் வாழ்வே போற்றி-435

57. அறனறி மூத்த அறிவே போற்றி-441

58. பெரியரிற் பெரிய பேறே போற்றி-444

59. மன்னுயிர் தாங்கும் மனநலம் போற்றி-457

60. தக்கதே செய்யும் தகையே போற்றி-466

61. அமைந்தாங் கொழுகும் அளவே போற்றி-474

62. செய்தற் கரிய செய்கையே போற்றி–489

63. அஞ்சாத் துணிவே துணையே போற்றி-497

64. திறந்தெரிந் தறியும் தெளிவே போற்றி-501

65. வாரி வழங்கும் வகையே போற்றி-512
66. அளவ ளாவும் அமிழ்தே போற்றி-523
67. சுற்றம் சுற்றும் சுடரே போற்றி-524
68. புகழ்ந்தவே புரியும் புகழே போற்றி-538
69. கோலது கோடாக் கொற்றமே போற்றி-546
70. குடிபுறங் காக்கும் குணமே போற்றி-549
71. ஒத்தாங் கொறுக்கும் உரனே போற்றி-561
72. கண்ணோட்டம் என்னும் கவினே போற்றி-571
73. உள்ளம் உடைமையாம் உடைமையே போற்றி-592
74. நீரள வுயரும் மலருளம் போற்றி-595
75. குடியெனும் குன்றா விளக்கே போற்றி-601
76. அறிவறிந் தாற்றும் ஆளுமை போற்றி-618
77. அடுக்கும் இடுக்கணை அழிப்பாய் போற்றி-625
78. இன்பத் தின்பம் விரும்பாய் போற்றி–629
79. மதிநுட்பம் நூலோ டுடையாய் போற்றி-636
80. உலகத் தியற்கை உணர்வோய் போற்றி–637
81, நிரந்தினிது சொல்லும் நீர்மையே போற்றி-648
82. வேண்டிய எலாம்தரும் வினைநலம் போற்றி-651
83. நடுக்கறு காட்சி நயனே போற்றி-654.
84. சொல்லிய செய்யும் சுடரே போற்றி-664
85: வீறெய்து மாண்பாம் வினைத்திறம் போற்றி-665
86. நூலருள் நூல்வல நுண்மையே போற்றி–683
87. தூய்மை துணைமை துணிவே போற்றி–688

88. போற்றற் கரியவை போற்றியே போற்றி-693
89. குறிப்பிற் குறிப்புணர் குறிப்பே போற்றி–703
90. ஒளியார் முன்னுறும் ஒளியே போற்ற–714
91. கற்றவை செலச்சொல் கலையே போற்றி–722
92. நாடா வளத்ததாம் நாடே போற்றி–739
93. அன்பின் குழவியாம் அருளே போற்றி-757
94. அருள்வளர் செவிலிப் பொருளே போற்றி–757
95. நிறைநீர நீரவர் கேண்மையே போற்றி-782
96. உள்ளம் பெருகுவ உள்ளுகை போற்ற–798
97. கேளிழுக்கம் கேளாக் கெழுதகை போற்றி–808
98. இகலென்னும் எவ்வம் இல்லாய் போற்றி–853
99. பகைநட்பாக் கொள்ளும் பண்பே போற்றி-874
100. அளவறிந் துண்ணும் அறிவே போற்றி–943
101. செப்பமும் நாணும் சேர்வே போற்றி-951
102. பெருக்கத்து வேண்டும் பணிவே போற்றி-953
103. உள்ள வெறுக்கையாம் ஒளியே போற்றி-971
104. கொல்லா நலத்ததாம் நோன்மையே போற்றி-984
105. நயனொடு நலம்புரி பயனே போற்றி–994
106. சீருடைச் செல்வ மாரியே போற்றி–1010
107. கருமத்தால் நாணும் நலனே போற்றி–1011
108. உழுதுண்டு வாழும் வாழ்வே போற்றி–1033

# திருக்குறள் போற்றித் தெளிவு

## குறளன்பன்


1. அகரம் ஆதித் தலைமைக் கழகு-1
2. மலர்வழி சான்றோர் மனவழி ஆகும்-3
3. உவமிக்க ஒண்ணார் ஒப்பிலா ராவரர்-7
4. எளிமை ஆளுமை ஏற்ற ஏணி-9
5. வழங்கும் வானாய் வளர்ந்து வாழ்க!-11
6. பொறிவழி ஒழுங்கால் புகழ்வலி வேறும்-24
7. உறுதியார் நிறைமொழி உலகில் ஓங்கும்-28
8. குன்றா முயற்சி உரனைக் கொடுக்கும்-29
9. மனத்தால் சிறந்தால் குற்றம் மடியும்-34
10. முறைமை வாழ்வால் முழுமை வாய்க்கும்-50
11. ஒன்றிய மனத்தால் மனையறம் ஓங்கும்-60
12. அறிவின் ஆக்கம் பயன்மை ஆகும்-61
13. அன்பின் நெருக்கம் இயக்கம் ஆகும்-73
14. வளரும் அன்பினால் வருவிருந் தோங்கும்-83
15. இனியன பேசி இன்பம் எய்துக-99
16. செய்யார்க் குதவும் சீர்மை தாங்குக-101

.7. தேவைக் குதவல் செழுமை சேர்க்கும்-102

8. வைர நெஞ்சால் நடுநிலை வாழும்–118

9. திரியாத் தன்மை சிறப்பின் சீர்த்தி–124

20. வழுவா மனத்தால் ஒழுக்கம் வளரும்–139

21. பண்படப் பழகின் பொறுமை பூக்கும்–156

22. அறத்தார் பொறாமை அற்றார் ஆவார்–163

23. அறிவர் விரும்பார் அயலார் ஆக்கம்–179

24. புறம்பழி பேசார் அறப்பொலி வடைவார்–183

25. பயன்தரப் பேசிப் பழகப் பயில்க–197

26. நினைவு நலத்தால் தீங்கு நீங்கும்–204

27. ஒத்தது அறிதல் உயிர்வாழ் வாகும்-214

28. அறிவர் உடைமை பொதுமை ஆகும்–215

29. ஒப்பும் உளத்தால் ஒப்புர வோங்கும்–216

30. உலகின் துன்பை உதவி ஒழிக்கும்–217

31. இயற்கை ஈகை எதிர்பார்ப்பின்மை–221

32. பிறர்துயர் தீர்ப்பார் வலிமை பெரிது–225

33. பழியா வானாய் பெருமை பெறுக–240

34. அல்லன செய்யார் அஞ்சுதல் அற்றார்-244

35. அருளால் அல்லல் அடியோ டகலும்-245

36. உள்ளம் கொல்வது உயிர்க்கொலை ஆகும்-259

37. பற்றை அறுத்தால் பாராட்டுப் பெறலாம்-268

38. முறைமையும் உரனும் நீட்சியின் முதற்படி-269

39. எல்லையில் நிற்றல் இன்பம் ஈனும்–288

40. பொய்யா ஒழுக்கம் புகழைப் பயக்கும்-294

41. விரிக்கும் மனத்தால் சினத்தீ விலகும்-303
42. இனிமை தீமை எண்ணாமை யாகும்-314
43. பகிர்ந்து பழகும் பண்பர் ஆகுக-322
44. நன்று என்றும் நிலைபே றுடைய து-331
45. பற்றை அறுத்தால் துன்பம் பறக்கும்-348
46. மெய்ப்பொருள் கண்டார் மேன்மை அடைவார்-352
47. உணர்ந்து தெளியும் ஒளியார் ஆகுக-354
48. அறிவுத் திறத்தார் தெளிவை அடைவார்-358
49. குலையா நெஞ்சுரம் விருப்பைக் கொல்லும்-370
50. உறுதியார் ஊக்கம் ஊழையும் வெல்லும்-371
51, முறைமைக் கிலக்கணம் முறைபிற ழாமை-388
52. பயனாகிப் பயனாக்கல் சான்றோர் பொன்னெறி-399
53. நோக்கில் சிறந்தால் நுட்பம் நோக்கலாம்-407
54. ஆவது அறிதல் நினைவால் ஆகும்-427
55. முந்தித் தடுத்தல் முழுக்காப் பாகும்-429
56. கொள்கை வேலி வருமுன் காக்கும்-435
57. அறவழி வழங்கும் அழகிய அறிவொளி-441
58. நடையழகு நல்கும் பெரியார் நன்னெறி-444
59. சிற்றினஞ் சேரார் மன்னுயிர் தாங்குவார்-457
60. தகுந்த தென்பது தெரிந்து செய்வது-466
61. அளவு நடையால் வெற்றி அகப்படும்-474
62. காலம் கூடின் ஞாலம் கூடும்-489
63. அச்சம் அகற்றி அஞ்சார் ஆகுக-497
64. ஆராய்ந் தறிதல் திறனுக் கழகு-501
65. வழிகண்டு முயன்றால் வளங்கள் பெருகும்-512

66. கலந்து பழகுதல் காப்பீ டாகும்-523

67. சுருங்கா வாழ்வைச் சுற்றம் தருஉம்-524

68. பயன்தரும் உழைப்பால் புகழ்ப்பொலி வோங்கும்-538

69. ஆட்சிக் கிலக்கணம் ஆளும் செங்கோல்-546

70. குடையாளுக் கழகு காத்தலும் கடிதலும்-549

71. ஒறுப்பில் நடுநிலை வேந்தர்க் கொளியாம்-561

72. ஒளிச்சீர்க் கண்ணோட்டம் உலகை ஓம்பும்571

73. ஒழியா உடைமை உள்ளம் உடைமை-592

74. உயர்ந்த எண்ணம் உறுதுணை யாகும்-595-

75. கொள்கைக் குடியார் சோம்பலுக் கிடங்கொடார்-601

76. வெற்றியின் வாயில் மனவினை ஆளுமை-618

77. அடுக்கும் துன்பினை ஆளுமை அழிக்கும்-625

78. எண்ணிச் சிறந்தால் எல்லாம் இனிதே-629

79. மதிநூல் நுட்பம் வினையின் மேன்மை-636

80. ஒவ்வுதற் குரியது உலகத் தியற்கை-637

81. வல்லார் சொல்வழி ஞாலம் விரையும்-648

82. தூய்மை செயலில் தாங்கித் துலங்குக-651

83. நடுங்கா நெஞ்சம் நன்னெறி நிற்கும்-654

84. திட்பம் தாங்கும் செயல் ஒளிச்சீர்மை-664

85. சீரும் புகழும் செய்திறன் சேர்க்கும்-665

86. கற்றார் போற்ற உரைக்கக் கற்க-683

87. துணிந்து தூய்மை தாங்கிந் துலங்குக-688

88. தவறா ஒழுக்கம் குற்றம் தகர்க்கும்-693

89. கூறாமை நோக்கிக் கூறல் குறிப்பு-703

90. அறிவர் வீச்சு முதன்மை ஆகும்-714

91. தெளிந்தார் சீர்மொழி ஞாலம் செல்வம்-722

92. வளந்தரும் இயற்கை நாட்டை வளர்க்கும்-739

92. அன்பின் ஆக்கம் அறிவருள் ஆகும்-757

94. அருளும் பொருளார் ஆகி வாழ்க-757

95. தேயா நட்பு சேர்க்கும் செந்நெறி-782

96. உயர்ந்தோர் ஊக்கம் உயிர்நினைவாக்கும்-798

97. குற்றம் பொறுக்கும் குணத்தார் ஆகுக-808

98. நோய்நினை வறுத்தால் நுண்புகழ் நீளும்-853

99. பகையை விலக்கும் பண்பைப் பெறுக-874

100. அறிவின் சீர்மை அளவறிந் துண்ணல்-943

101. நற்குடிக் கழகு நடுநிலை நாணம்-951

102. செல்வத்துப் பணிதல் சீரைச் சேர்க்கும்-953

103. பெருகிய ஊக்கம் பெருமை தாங்கும்-971

104. உலகம் ஒப்பா உயிர்க்கொலை ஒழிக-984

105. நெஞ்சின் நன்னெறி நீதியும் நன்மையும்-994

106. பயன்தரும் மாரியாய் வாழ்வது பண்பு-1010

107. இழிந்தது எண்ணா இயல்பராம் எழுக-1011

108. வள்ளல் நெறியை வையம் வாழ்த்தும்-1033

2412

## 'திருக்குறள் போற்றி' பரப்பும் குறள்நெறிக் குடும்பங்கள்

குறளாயம்
8-மண்டபம் வீதி
ஈரோடு-638001

திருவள்ளுவர் தவச்சாலை
திருவளர்குடி
அல்லூர்-620101

வள்ளுவர் அறிவியல் மையம்
அரும்பாவூர்-621103.